UK Health Security Agency

# ஹெபடைடிஸ் A (Hepatitis A) ஐப் பற்றி

ஹெபடைடிஸ் A என்பது ஒரு தொற்று நோயாகும், அது கல்லீரலை பாதிக்கிறது. இதற்குச் சிகிச்சை கிடையாது, ஆனால் பெரும்பாலான மக்கள் 6 மாதங்களுக்குள் நலமடைகின்றனர். அரிதான சந்தர்ப்பங்களில், சிலர் தீவிர கல்லீரல் நோயைப் பெறலாம். தடுப்பூசி போடுதல் மற்றும் நல்ல சுகாதாரம் ஆகியவை நோய்த் தொற்று பெறுவதைத் தடுக்கும் சிறந்த வழியாகும்.

## காரணங்கள் மற்றும் பரவல்

ஹெபடைடிஸ் A, ஒரு வைரஸால் ஏற்படுகிறது. அந்த வைரஸ், பாதிக்கப்பட்ட நபர் ஒருவரின் மலத்தில் வாழ்கிறது. இது, பல மணி நேரம் மேற்பரப்புகளில் உயிர்வாழ முடியும், மேலும் கைகளிலும் உணவிலும் நீண்ட நேரம் இருக்க முடியும். இது மக்களிடையே எளிதில் பரவுகிறது.

## குறிகுணங்கள்

ஹெபடைடிஸ் A குறிகுணங்கள்:

- உடல் வெப்பநிலை உயர்வு
- இன்ஃப்ளுயன்சா போன்ற குறிகுணங்கள்
- நோய்நிலை
- மஞ்சள் காமாலை (தோல் மற்றும் கண்களின் வெள்ளைப் பகுதி மஞ்சள் ிறமாக மாறுதல்)
- சாம்பல் நிற மலம் அல்லது அடர் பழுப்பு நிற சிறுநீர்

சில குழந்தைகள் எந்த குறிகுணங்களையும் காட்டுவதில்லை, ஆனால் மற்றவர்களுக்கு தொற்றை ஏற்படுத்தலாம்.

## நீங்கள் எப்படி நோய்த் தொற்றைப் பெறுகிறீர்கள்

நீங்கள் ஹெபடைடிஸ் A ஐ இங்கிருந்து பெறலாம்:

- அசுத்தமான தண்ணீரைக் குடித்தல்
- மாசுபட்ட உணவை உண்ணுதல்

- நோய்த் தொற்று ஏற்பட்ட நபருடன் நெருங்கிய உடல் தொடர்பு, உடலுறவு கொள்வது அல்லது போதைப்பொருள் பயன்பாட்டிற்கான ஊசிகளைப் பகிர்ந்து கொள்வது உட்பட.

## பரவலைத் தடுக்கவும்

பின்வரும் செயலைச் செய்தவுடன் சோப்பு மற்றும் தண்ணீரைக் கொண்டு உங்கள் கைகளைக் கழுவவும்:

- கழிப்பறைக்குச் சென்ற பிறகு
- சாப்பிடுவதற்கு அல்லது உணவு தயாரிப்பதற்கு முன்பு
- அழுக்கு டயப்பர்கள் அல்லது நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் ஆடைகளைக் கையாண்ட பிறகு

உங்கள் குறிகுணங்கள் தொடங்கிய பிறகு, நீங்கள் 7 நாட்களுக்குப் பெரும்பாலும் வைரஸை கடத்த வாய்ப்புள்ளது.

## தடுப்பூசி போடுதல்

நீங்கள் ஹெபடைடிஸ் A தடுப்பூசியைப் பெற வேண்டிய நிகழ்வுகள்:

- கடந்த 2 வாரங்களுக்குள் நோய்த் தொற்று ஏற்பட்ட நபருடன் நெருங்கிய உடல் தொடர்பில் இருந்திருந்தால்
- ஹெபடைடிஸ் A அதிகமாக உள்ள ஒரு நாட்டிற்கு பயணம் செய்கிறீர்கள் என்றால்
- ீண்டகால கல்லீரல் நோய் அல்லது ஹீமோபிலியா கொண்டிருந்தால்
- ஆண்களுடன் உடலுறவு கொள்ளும் ஒரு ஆணாக இருந்தால்
- தொற்று ஏற்படுவதற்கான அதிக ஆபத்து உள்ள ஒரு வேலையில் நீங்கள் ஈடுபட்டால், கழிவுநீர் சுத்திகரிப்பு தொழிலாளி போன்ற வேலைகள்

## ஹெபடைடிஸ் A ஐப் பற்றி மேலும் அறிக

ஹெபடைடிஸ் A மற்றும் அதன் குறிகுணங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு nhs.uk/conditions/hepatitis-a/ இல் NHS வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

**UK சுகாதார பாதுகாப்பு நிறுவனம்**
**சுகாதார அச்சுறுத்தல்களுக்குத் தயாராகுதல், தடுத்தல் மற்றும் பதிலளித்தல், உயிர்களைக் காப்பாற்றுதல் மற்றும் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல்.**